**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**உயர் கல்வி பிரிவு**

# மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிறுவுதல்

அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்தினால் வழங்கப்படும் கடன் உதவி அடிப்படையில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின், உயர் கல்வி பிரிவு மூலம் செயற்படுத்தப்படும் மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை நிறுவும் திட்டத்தின் கீழ் தரப்பட்டிருக்கும் பதவிகளுக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2026.02.02 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01/2026 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய திட்ட முகாமைத்துவப் பிரிவு ஒன்றாக இந்தத் திட்டம் நிறுவப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முழுமையான பெறுமதி குவைட் டினார் 10 மில்லியன் வரையாகும்.

| வரிசை இலக்கம் | பதவி | சம்பளப் பிரிவு | பதவி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | பெறுகை நிபுணர் | PS 3 | 01 |
| 02 | திட்ட பொறியியலாளர் | PS 4 | 01 |
| 03 | உள்ளக கணக்காய்வாளர் | PS 4 | 01 |
| 04 | திட்ட கணக்காளர் | PS 4 | 01 |
| 05 | திட்ட அதிகாரி | PS 6 | 01 |
| 06 | முகாமைத்துவ உதவியாளர் | முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2026 இன் 3.2.3 உறுப்புரைக்கு அமைவானது | 02 |
| 07 | அலுவலக உதவியாளர் | | 01 |
| 08 | ஓட்டுநர் | | 01 |

LankaPast Papers.com

**பதவிகளுக்கு தேவையான தகைமைகள்**

மேலுள்ள ஒவ்வொரு பதவிக்காகவும் தேவையான குறைந்தபட்ச தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பில் மேலதிக விபரங்களை www.mohe.gov.lk என்ற இணையதள பக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**சாதாரண நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதவிக்கு தொடர்புடைய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்களை கோரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது அவசியமாகும்.
2. குவைட் அரசு அல்லது வெளிநாட்டு நிதி அடிப்படையில் செயற்பட்ட திட்டம் ஒன்றில் அனுபவம் விசேட தகைமையாக அமையும்
3. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிறந்த உடல் மற்றும் உளத் தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.
4. வயது வரம்பு: உச்ச வயது 64 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல்.
5. **சம்பளம்:**
   I. முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2026.02.02 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01/2026 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கு அமைய உரித்தாகும் சம்பளம் மற்றும் மற்ற கொடுப்பனவுகள்
   II. செயல்திறன் அடிப்படையிலான வருடாந்த சம்பள உயர்வு

LankaPast Papers.com

6. **சேவை நிபந்தனைகள்**
   01 ஆண்டு காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும். வருடாந்த செயல்திறன் மற்றும் சேவையின் தேவை அடிப்படையில் அந்தக் காலம் ஒவ்வொரு ஆண்டும் மேலும் இரண்டு ஆண்டு உச்ச காலம் வரை நீடிப்பது தொடர்பில் கருத்திற் கொள்ளப்படும்.
7. **வேறு நன்மைகள்:**
   I. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பணியாளரிடம் இருந்து 8% பங்களிப்பும், தொழில் வழங்குநரிடம் இருந்து 12% பங்களிப்பும் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக 3% பங்களிப்பும் தொழில் வழங்குநரால் ஏற்கப்படும்.
   II. முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம் 01/2026 இற்கு அமைய உரித்தாகும் மற்ற கொடுப்பனவுகள்

தகைமை, அனுபவம் மற்றும் வேறு தொடர்புடைய விபரங்கள் தொடர்பில் முழுமையான விபரங்களை குறிப்பிட்டு விண்ணப்பதாரர் தொடர்பிலான விபரங்களை கேட்க முடியுமான உறவினர் அல்லாத இருவரின் பெயர்களுடன் நீங்கள் தயாரித்த விண்ணப்பங்களை 2026.03.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, உயர் கல்வி பிரிவு, இலக்கம் 18, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுவது அவசியமாகும்.

தகைமையை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு எந்த வகையான அழுத்தங்கள் கொடுப்பதும் தகைமை இழப்பாக அமையும். அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**
**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**உயர் கல்வி பிரிவு**
**இலக்கம் 18, வோர்ட் பிளேஸ்**
**கொழும்பு 07.**

LankaPast Papers.com